பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
18 03 2026 WEDNESDAY 7 15 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மின்துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- பீகாரில் தொடக்க வேளாண் கடன் சங்கங்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- பிரஸார் பாரதியின் வேவ்ஸ் O.T.T. தளத்தை இதுவரை 84 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
- தில்லியில் இன்று நேரிட்ட தீ விபத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.
- Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ayush Shetty மற்றும் Anmol Kharb காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

மின்துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக மத்திய மின் துறை அமைச்சர் திரு. மனோகர் லால் எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் வகையில் மின்துறைக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் 6 ஆயிரத்து 969 கோடி ரூபாய் செலவில் நான்கு வழிச்சாலை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், Barabanki – Bahraich இடையே 101 கிலோமீட்டர் தொலைவிற்கு இந்த வழித்தடம் அமைக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

>>>>><<<<<

பீகாரில் தொடக்க வேளாண் கடன் சங்கங்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், பீகார் மாநிலத்தில் மட்டும் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருவதாக கூறினார்.

இவற்றை கணினிமயமாக்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட வேளாண் கடன் சங்கங்கள் பொதுசேவை மையங்களாக செயல்பட்டு வருவதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>>><<<<<

உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கும் மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் தமது துறையின் மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

அனைவருக்கும் ஊட்டச்சத்து மிக்க உணவு கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக கூறிய அவர் அதுகுறித்த புள்ளி விவரங்களையும் எடுத்துரைத்தார்.

உணவு தானிய உற்பத்தி இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

மானிய விலையில் உரங்கள் விவசாயிகளுக்கு தடையின்றி வழங்கப்பட்டு வருவதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

அமைச்சரின் இந்த பதிலுரைக்குப் பின்னர், வேளாண் துறையின் மானிய கோரிக்கை மக்களவையில் நிறைவேறியது.

>>>>><<<<<

எல்லைப்பகுதியில் உள்ள கிராமங்களில் தொலைத்தொடர்பு கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் இதனை தெரிவித்த அவர், உத்ராகண்டை ஒட்டிய எல்லைப்பகுதியில் உள்ள 750 கிராமங்களில் 684 கிராமங்களுக்கு தொலைத்தொடர்பு வசதி வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

எஞ்சிய கிராமங்களுக்கும் விரைவில் தொலைத்தொடர்பு வசதி ஏற்படுத்தப்படும் என்றும் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

>>>>><<<<<

பிரஸார் பாரதியின் வேவ்ஸ் O.T.T. தளத்தை இதுவரை 84 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், பிரஸார் பாரதியின் Shabd சேவை, தமிழ் உள்ளிட்ட 15 மொழிகளில் வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

நாடுமுழுவதும் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சி தொடர்பான செய்திகளை இந்த சேவை வழங்கி வருவதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

>>>>><<<<<

வெளியுறவுத் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழுக் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் திரு. சசிதரூர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மேற்காசிய விவகாரம் குறித்து அதிகாரிகள் எடுத்துரைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

இதனிடையே, மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழல் காரணமாக, இதுவரை 2 லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் தாயகம் திரும்பியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வளைகுடா விவகாரங்களுக்கான கூடுதல் செயலர் திரு. Assem Mahajan, கடந்த 19 நாட்களில் இவர்கள் அழைத்து வரப்பட்டதாக கூறினார்.

ஐக்கிய அரபு எமிரேட்டிலிருந்து 70 விமானங்கள் இயக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்காசிய நிலவரத்தை மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் திரு. Assem Mahajan கூறினார்.

>>>>><<<<<

மேற்குவங்கம், அஸ்ஸாம், கேரளம், தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல்கள், நேர்மையாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதற்காக 25 லட்சத்திற்கும் மேற்பட்ட அலுவலர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

70 வாக்காளர்களுக்கு ஒரு அலுவலர் என்ற நிலையில் இவர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்காளர்களுக்கு சேவை வழங்குவதற்கென, 2 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

832 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு, 557 பொதுப்பார்வையாளர்களும், 188 காவல்துறை பார்வையாளர்களும், 366 செலவினப் பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் பார்வையாளர்கள் அனைவரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிகளில் பணியை தொடங்கியுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

மேற்குவங்க மாநிலத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட Humayun Kabir தலைமையிலான கட்சி, 182 தொகுதிகளில் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளது.

முதல்கட்டமாக, 15 வேட்பாளர்கள் கொண்ட பட்டியலையும் அக்கட்சி வெளியிட்டுள்ளது.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு சீராக பராமரிக்கப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

லக்னோவில் உள்ள மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக உத்தரபிரதேசம் உருவெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அனைத்து மத நிகழ்ச்சிகளும் அமைதியாக நடைபெற்று வருவதாகவும் திரு. யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.

>>>>><<<<<

தில்லியில் இன்று நேரிட்ட தீ விபத்தில், 3 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர், 3 பேர் காயமடைந்தனர்.

*பாலம் மெட்ரோ ரயில் நிலையம் அருகே, ஐந்து மாடி கட்டிடத்தில் இந்த விபத்து நேரிட்டதாக தீயணைப்புத் துறையினர் தெரிவித்தனர்.*

*விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினர்.*

*இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா பத்து லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா அறிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*மஹாராஷ்ட்ராவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.*

*நவிமும்பை அருகே, மும்பை – புனே விரைவுச்சாலையில் சென்று கொண்டிருந்த லாரி கட்டுப்பாட்டை இழந்து, ஐந்து வாகனங்கள் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*>>>>><<<<<*

*Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ayush Shetty காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 17-21, 21-10, 21-17 என்ற செட்கணக்கில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ்-ஐ வென்றார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவில் Anmol Kharb மற்றும் தன்வி சர்மா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.*

*--------------*

*ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Nitesh Kumar காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 21-16 என்ற செட்கணக்கில் பெருவின் Gerson Jair Vargas Lostaunaul-ஐ வென்றார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவில் துளசிமதி முருகேசன், மனிஷா ராமதாஸ் மற்றும் Neeraj காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>><<<<<*

*டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா முதலிடத்தில் நீடிக்கிறார்.*

*பந்து வீச்சுப் பிரிவில் வருண் சக்கரவர்த்தி தொடர்ந்து இரண்டாவது இடத்தில் உள்ளார்.*

*>>>>><<<<<*

*கென்யாவில் நடைபெற்ற சர்வதேச கார் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Naveen - Musa இணை வெண்கலப்பதக்கம் வென்றது.*

*>>>>><<<<<*

*இந்தியன் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டி இன்று மும்பையில் தொடங்கியது.*

*>>>>><<<<<*

*ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டிக்கான பயிற்சிக்காக இந்திய அணியின் இரண்டாவது குழுவினர் மங்கோலியா சென்றடைந்தனர்.*

*>>>>>END<<<<<*